# 01 வீட்டுத் தோட்டம் I

கமலாவின் மகன் சுரேஸ். சுரேஸின் நண்பர்கள் தினேஸ், காந்தி. அவர்களின் தாயார் திருமதி ஜீவன் ஆகியோர் சுரேஸின் வீட்டிற்கு வருகிறார்கள். சுரேஸின் அம்மா அவர்களை அன்புடன் வரவேற்கின்றார்.



சுரேஸ் : அம்மா, அம்மா இங்கே வாங்கோ! யார் யார் வந்திருக்கிறாங்க என்று பாருங்கோ.

கமலா : வணக்கம்! வாங்கோ! வாங்கோ!

திருமதி ஜீவன் : வணக்கம்! வணக்கம்! கமலா அக்கா.

கமலா : வாங்கோ, தினேஸ், காந்தி வாங்கோ.
உட்காருங்கோ, என்ன குடிக்கிறீங்க?

திருமதி ஜீவன் : நாங்கள் காலைச் சாப்பாடு சாப்பிட்டுத்தான் வந்தோம்.

கமலா : இருங்கோ, ஏதாவது குடிக்கக் கொண்டு வாறேன்.

சுரேஸ் : ஜீவன் மாமி, வடை சாப்பிடுங்கோ. தினேஸ் காந்தி வடை எடுங்கோ.

காந்தி : கமலா மாமி, வடை சரியான உறைப்பு.

கமலா : இந்தாங்கோ, எல்லோரும் அரியதரம் சாப்பிடுங்கோ.

திருமதி ஜீவன் : எனக்கு வேண்டாம். நான் இனிப்புச் சாப்பிடக் கூடாது.

சுரேஸ் : எல்லோரும் தேநீர் குடியுங்கோ.

கமலா : சரி இருங்கோ நான் பகல் சமையலுக்கு மரக்கறி கொஞ்சம் ஆய்ந்து வாறேன்.

திருமதி ஜீவன் : தோட்டத்தைப் பார்க்க நாங்களும் வரலாமா?

கமலா : வாங்கோ, பிள்ளைகளும் வாங்கோ.
தோட்டத்தைச் சுத்திப்பார்த்து வருவோம்.

### பாட ஆசிரியருக்கான குறிப்பு

*இந்த உரையாடலைச் சரியான உச்சரிப்புடன் ஆசிரியர் உரத்து வாசிக்கவும் (ஐவர் கொண்ட குழு பாத்திரமேற்று நடிக்கவும் வழிகாட்டவும்)*

### செயற்பாடு 01

**கிரகித்தற் பயிற்சி. (வாய்மொழி மூலம்)**

**පාඩම කියවා පිළිතුරු දෙන්න.**

1. சுரேஸின் அம்மாவின் பெயர் என்ன?
2. விருந்தினருக்கு வழங்கப்பட்ட சிற்றுண்டி என்ன?
3. தோட்டத்தைப் பார்க்கச் சென்றவர்கள் யாவர்?
4. உறைப்பாக இருந்த சிற்றுண்டி எது?

### செயற்பாடு 02

**பேசிப்பழகுவோம்.**

**කතාබහ පුරුදුවෙමු.**

நீங்கள்
- வாங்கோ
- பாருங்கோ
- இருங்கோ
- உட்காருங்கோ
- சாப்பிடுங்கோ
- குடியுங்கோ

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
| --- | --- |
| நீங்க இங்கே வாங்கோ. | நீங்கள் இங்கே வாருங்கள் |
| நீங்க இங்கே பாருங்கோ. | நீங்கள் இங்கே பாருங்கள். |
| நீங்க அங்கே இருங்கோ. | நீங்கள் அங்கே இருங்கள் |
| நீங்க அங்கே உட்காருங்கோ. | நீங்கள் அங்கே உட்காருங்கள். |
| நீங்க தோசை சாப்பிடுங்கோ. | நீங்கள் தோசை சாப்பிடுங்கள். |
| நீங்க பால் குடியுங்கோ. | நீங்கள் பால் குடியுங்கள். |
| எனக்குத் தேநீர் தாங்கோ. | எனக்குத் தேநீர் தாருங்கள். |
| எனக்குப் பால் தாங்கோ. | எனக்குப் பால் தாருங்கள். |
| எனக்கு வடை தாங்கோ. | எனக்கு வடை தாருங்கள். |
| எனக்குச் சோறு தாங்கோ. | எனக்குச் சோறு தாருங்கள். |
| எனக்குப் பழம் தாங்கோ. | எனக்குப் பழம் தாருங்கள். |



## செயற்பாடு 03
## பேசிப்பழகுவோம்.
## කතාබහ හුරුවෙමු.



எனக்குப் பழம் வேணும், தாங்கோ.

எனக்கு வடை வேணும், தாங்கோ.

எனக்குப் பழம் வேணாம், வடை தாங்கோ.



எனக்குப் பாண் வேணாம், சோறு தாங்கோ.

எனக்குப் பழம் வேணாம், வடை வேணும்.

எனக்குப் பாண் வேணாம், சோறு வேணும்.



எங்களுக்குப் பழம் வேணும், தாங்கோ.

எங்களுக்கு வடை வேணும், தாங்கோ.

எங்களுக்குப் பழம் வேணாம், வடை தாங்கோ.

எங்களுக்குப் பாண் வேணாம், சோறு தாங்கோ.

எங்களுக்குப் பழம் வேணாம், வடை வேணும்.

எங்களுக்குப் பாண் வேணாம், சோறு வேணும்.

**உரத்து வாசிப்போம்**
**හඬ නගා කියවන්න.**

ஒருமை

நான்
- படிக்கிறேன்
- குடிக்கிறேன்
- சாப்பிடுகிறேன்
- வருகிறேன்
- போகின்றேன்

பன்மை

நாங்கள்
- படிக்கிறோம்
- குடிக்கிறோம்
- சாப்பிடுகிறோம்
- வருகிறோம்
- போகிறோம்

**உதாரணம்:**

நான் பாடம் படிக்கிறேன்.
நாங்கள் பாடம் படிக்கிறோம்.

நான் தேநீர் குடிக்கிறேன்.
நாங்கள் தேநீர் குடிக்கிறோம்.

நான் வடை சாப்பிடுகிறேன்.
நாங்கள் வடை சாப்பிடுகிறோம்.

நான் இங்கே வருகிறேன்.
நாங்கள் இங்கே வருகிறோம்.

நான் அங்கே போகிறேன்.
நாங்கள் அங்கே போகிறோம்.



**பாட ஆசிரியருக்கான குறிப்பு**

*மேற்குறிப்பிட்ட வாக்கியங்களை மாணவர்களைத் தனியாகவும், குழுவாகவும் பேசிப்பழகச் சந்தர்ப்பம் வழங்குங்கள். இதேபோல் பல்வேறு வாக்கியங்களைப் பேசிப்பழகச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.*



**செயற்பாடு 04**
**குறுகிய, நீண்ட ஓசையுடைய சொற்களை அறிந்து கொள்வோம்.**
**කෙටි හා දික් හඬ ඇති වචන හඳුනාගෙන කියවමු.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பல் | - | பால் | பலம் | - | பாலம் |
| மதம் | - | மாதம் | நகம் | - | நாகம் |
| பணம் | - | பாணம் | கரம் | - | காரம் |
| மலை | - | மாலை | கலை | - | காலை |
| படம் | - | பாடம் | கொடி | - | கோடி |



**செயற்பாடு 05**

**ஒத்தொலிக்கும் சொற்களை இனங்காண்போம்.**

**ල, ළ ශබ්ද යෙදෙන වචන උච්චාරණය කරමු.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலை | - | மழை | அலை | - | அழை |
| ஒலி | - | ஒளி, ஒழி | பலம் | - | பழம் |
| காலை | - | காளை | வலம் | - | வளம் |
| தலை | - | தளை | குலை | - | குழை |
| வலை | - | வளை | வலி | - | வளி, வழி |